# காலாண்டுத் தேர்வு – 2024

**A**

## சமூக அறிவியல்

**வகுப்பு : 8** **மதிப்பெண்கள் : 100**

**காலம் : 2.30 மணி**

பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்து எடுத்து எழுதுக.** **14x1=14**

1. 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?

அ) பிரான்ஸ் ஆ) துருக்கி இ) நெதர்லாந்து ஈ) பிரிட்டன்

2. துணைப்படைத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய சுதேச அரசு எது?

அ) அயோத்தி ஆ) ஹைதராபாத்

இ) உதயப்பூர் ஈ) குவாலியர்

3. எந்த கவர்னர் ஜெனரலின் காலத்தில் வங்காளத்தில் நிரந்தர நிலவரித் திட்டம் கொண்டு வரப்பட்டது?

அ) ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆ) காரன்வாலிஸ் பிரபு

இ) வெல்லெஸ்லி பிரபு ஈ) மிண்டோ பிரபு

4. பாளையக்காரர் முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு?

அ) 1519 ஆ) 1520 இ) 1529 ஈ) 1530

5. பின்வரும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையைக் குறிப்பிடவும்.

I. வேலூர் புரட்சி 1801 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

II. நான்காம் மைசூர் போருக்குப் பின் திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்

III. வேலூர் புரட்சியின் போது வில்லியம் பெண்டிங் சென்னையின் ஆளுநராக இருந்தார்

IV. ஆங்கிலேயருக்கு எதிரான வேலூர் கலகத்தின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வு ஆகும்.

அ) I&II சரி ஆ) II&IV சரி இ) II&III சரி ஈ) I, II, & IV சரி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. உயிரினப் படிமங்கள் ____________ பாறைகளில் காணப்படுகின்றன.

அ) படிவுப் பாறைகள் ஆ) தீப்பாறைகள்

இ) உருமாறிய பாறைகள் ஈ) அடியாழப் பாறைகள்.

7. ____________ ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

அ) புவி ஆ) வளிமண்டலம்

இ) காலநிலை ஈ) சூரியன்.

8. குடிப்பதற்கு உகந்த நீரை __________ என்று அழைப்பர்.

அ) நிலத்தடி நீர் ஆ) மேற்பரப்பு நீர்

இ) நன்னீர் ஈ) ஆர்ட்டீசியன் நீர்.

9. மக்கள் __________லிருந்து __________க்கு நல்ல வேலை வாய்ப்பினைத் தேடி குடிபெயர்கின்றனர்.

அ) கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு

ஆ) நகர்ப்புறத்திலிருந்து கிராமப்புறத்திற்கு

இ) மலைகளிலிருந்து சமவெளிக்கு

ஈ) சமவெளியிலிருந்து மலைப்பகுதிக்கு.

10. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர் __________.

அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர்

இ) சபாநாயகர் ஈ) உள்துறை அமைச்சர்.

11. கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?

அ) பிறப்பின் மூலம் ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்

இ) வம்சாவழியின் மூலம் ஈ) இயல்பு குடியுரிமை மூலம்.

12. பின்வருவனவற்றுள் எது இந்தியாவை சமயச் சார்பற்ற நாடாக விவரிக்கிறது?

அ) அடிப்படை உரிமைகள்

ஆ) அடிப்படை கடமைகள்

இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள்

ஈ) அரசியலமைப்பின் முகவுரை.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

13. இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர் யார்?

அ) உதயகுமார் ஆ) அமர்த்தியா சென்

இ) அபிஜித் பானர்ஜி ஈ) இவர்களில் எவரும் இல்லை.

14. பின்வருவனவற்றில் கருப்புப் பணம் குவிப்பதற்கு காரணமானவர்கள் யாவர்?

அ) வரி ஏய்ப்பவர்கள் ஆ) பதுக்குபவர்கள்

இ) கடத்தல்காரர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்.

**II. பின்வரும் வினாக்களில் ஏதேனும் 10 வினாக்களுக்கு சுருக்கமான விடையளி வினா எண் 28 கட்டாயமாக விடையளிக்கவும். 10x2=20**

15 இளவரசர் ஹென்றி 'மாலுமி ஹென்றி' என ஏன் அழைக்கப்படுகிறார்?

16. மூன்றாம் மராத்திய போரின் விளைவுகள் யாவை?

17. நிரந்தர நிலவரி திட்டத்தின் சிறப்பு கூறுகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.

18. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் முக்கியத்துவம் யாது?

19. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான உடனடி காரணம் என்ன?

20. மண்ணின் வகைகளைக் கூறுக.

21. வளிமண்டலக் காற்றழுத்தம் என்றால் என்ன?

22. நீர் சுழற்சி – வரையறு.

23. இடப்பெயர்வுக்கான இழு காரணிகளில் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.

24. மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயர்களை எழுதுக.

25. நற்குடிமகனின் மூன்று பண்புகளைக் குறிப்பிடுக.

26. சமயசார்பின்மையின் நோக்கங்களைக் கூறுக.

27. சேமிப்பு மற்றும் முதலீடு என்றால் என்ன?

28. வரையறு: நெகிழிப் பணம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**III.பின்வரும் வினாக்களில் ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.)**

10x5=50

29. **நிரப்புக**

i. சிராஜ் உத் தௌலாவின் தலைமை படைத்தளபதி ____________.

ii. புவியின் தோல் என்று ____________ அழைக்கப்படுகிறது.

iii. ____________ என்பது குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவதாகும்.

iv. இந்திய அரசியலமைப்புச் சட்டம் ____________ குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.

v. மின்னணு வங்கியை ____________ என்றும் அழைக்கலாம்.

30. **பொருத்துக**

i. ஆங்கிலேயர்கள் – கீழவை

ii. நீல் தர்பன் – செயல்படும் எரிமலை

iii. பாரன் தீவு – இண்டிகோ விவசாயிகளின் துயரம்

iv. சட்டமன்ற பேரவை – 1935

V. இந்திய ரிசர்வ் வங்கி – 1600

31. **சரியா? தவறா?**

i. வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்.

ii. இரயத்வாரி முறை தாமஸ் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது.

iii. மேய்ச்சலுக்காக கால்நடைகளை இடமாற்றம் செய்வது பருவகால இடம் பெயர்வு எனவும் அழைக்கப்படுகிறது.

iv. ஆளுநர் சட்டமன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார்.

v. பரிமாற்றத்திற்கு பணத்தின் சமீபத்திய வடிவங்கள் பண்டமாற்று முறை.



32. **வேறுபடுத்துக.**

1. காலநிலை மற்றும் வானிலை
2. உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள்

**காரணம் கூறுக**

1. உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.

33. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.

34. பூலித்தேவரைப் பற்றி நீவீர் அறிந்ததை எழுதுக.

35. நீர் வழிந்தோடல் மற்றும் அதன் வகைகளை விவரி.

36. காற்றையும், அதன் வகைகளைப் பற்றியும் விவரி.

37. இடம் பெயர்வுக்கான பல்வேறு காரணங்களை விரிவாக எழுதுக.

38. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

39. ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்திய குடியுரிமை ரத்து செய்யப்படுகிறது?

40. பண்டமாற்று முறையில் உள்ள தீமைகள் யாவை?

41. வங்கி வைப்புகளின் வகைகளை விவரி?

42. இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

1. மெட்ராஸ் 2. பிளாசி 3. டெல்லி
4. குவாலியர் 5. கள்ளிக்கோட்டை.

**IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி** 2x8=16

43. அ) ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?

**(அல்லது)**

ஆ) மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்.

44. கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.


1. கடகரேகை 2. டோக்கியோ 3. புதுடில்லி
4. இலத்தீன் அமெரிக்கா 5. பாரிஸ்
6. ஷாங்காய் 7. இலண்டன் 8. மெக்சிகோ நகரம்




www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com




www.Padasalai.Net

**காலாண்டுத் தேர்வு– 2024**

**சமூக அறிவியல்–விடைக்குறிப்புகள்(தமிழ்/English)**

| | பகுதி–I | Part–I 14 × 1= 14 |
|---|---|---|
| I | சரியான விடை/ Choose the Correct answer | |
| 1. | ஆ) துருக்கி | b) The Turks |
| 2. | ஆ) ஹைதராபாத் | b) Hyderabad |
| 3. | ஆ) காரன்வாலிஸ் பிரபு | b) Lord Cornwallis |
| 4. | இ) 1529 | c) 1529 |
| 5. | இ) II & III சரி | c) ii & iii are correct |
| 6. | அ) படிவுப் பாறைகள் | a) Sedimentary rocks |
| 7. | இ) காலநிலை | c) climate |
| 8. | இ) நன்னீர் | c) Portable water |
| 9. | அ) கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு | a) rural to urban |
| 10. | ஆ) முதலமைச்சர் | b) Chief Minister |
| 11. | ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம் | b) Acquiring property |
| 12. | ஈ) அரசியலமைப்பின் முகவுரை | d) Preamble of the Constitution. |
| 13. | அ) உதயகுமார் | a) Udhyakumar |
| 14. | ஈ) மேற்கண்ட அனைத்தும் | d) all of the above |
| | பகுதி-I I | **Part-II 10 × 2= 20** |
| II | **சுருக்கமான விடை.<br>(கட்டாய வினா எண்: 28)** | **Answer the following question.<br>(Q.NO.28 is compulsory)** |
| 15. | உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார். கடற்பயணம் மேற்கொள்வது குறித்து ஒரு தனிப் பயிற்சி பள்ளியையும் நிறுவினார். | Prince Henry encouraged his countrymen to take up the adventurous life of exploring the unknown regions of the world. |
| 16. | i) போர் முடிவில் மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டு, பேஷ்வா பதவி ஒழிக்கப்பட்டது.<br>ii) 2–ம் பாஜிராவின் பகுதிகள் பம்பாயோடு இணைக்கப்பட்டது.<br>iii) தோற்கடிக்கப்பட்ட போன்ஸ்லே , ஹோல்கரின் மராத்திய பகுதிகளான நாக்பூர், இந்தூர் ஆகியவை ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்பட்டன.<br>iv) மராத்திய ஓய்வூதியமாக ரூபாய் 8–லட்சம் வழங்கப்பட்டது. | (i) The Maratha confederacy was dissolved and Peshwaship was abolished.<br>(ii) Most of the territory of Peshwa BajiRao II was annexed and became part of the Bombay Presidency.<br>(iii) The defeat of the Bhonsle and Holkar also resulted in the acquisition of the Maratha kingdoms of Nagpur and Indore by the British.<br>(iv) The BajiRao II, the last Peshwa of Maratha was given an annual pension of 8 lakh rupees. |
| 17. | i) ஆங்கில கம்பெனிக்கு வரி செலுத்தும் வரை ஜமீன்தார்கள் நில உடைமையாளர்களானார்கள்.<br>ii) வரி வசூல் செய்யும் அரசின் முகவர்களாக செயல்பட்டனர். | i) The Zamindars were recognized as the owners of the land as long as they paid the revenue to the East India Company regularly.<br>ii) The Zamindars acted as the agent of the Government for the collection of revenue from the cultivators. |
| 18. | ஜீன் 1801ல் மருது சகோதரர்கள் வெளியிட்ட பிரகடனம் ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்களை ஒன்று சேர்க்கும் முதல் அழைப்பு ஆகும். | The marudu Pandyas issued a proclamation of Independence called Tiruchirappalli Proclamation in June 1801, It was the first call to the Indians to unite against the British. |
| 19. | i) இராணுவத்தில் என்பீல்டு ரகதுப்பாக்கி அறிமுகப்படுத்தப்பட்டது.<br>ii) பன்றியின் கொழுப்பும், பசுவின் கொழுப்பும் தடவப்பட்ட துப்பாக்கி குண்டுகளை பயன்படுத்த இந்து, முஸ்லீம் வீரர்கள் மறுப்பு தெரிவித்தது புரட்சிக்கு உடனடி காரணமாயிற்று. | The immediate cause<br>i) Introduction of new Enfield Riffles in the army.<br>ii) For loading it, we want to use our mouth to remove the cartridge of the rifle.The cartridges were greased by the fat of cow and the pig. |
| 20. | வண்டல் மண்,கரிசல் மண்,செம்மண்,சரளை மண் மலை மண், பாலை மண். | Alluvial soil, Black soil, Red soil, Laterites soil, Mountain soil, Desert soil. |

| | | |
|---|---|---|
| 21. | புவியின் மேற்பரப்பில் குறிப்பிட்ட பகுதியிலுள்ள காற்றின் எடையே வளிமண்டலக் காற்றழுத்தம் எனப்படும். | The weight of air above a given area on the earth's surface is called atmospheric pressure or air pressure. |
| 22. | i) நீரியல் சுழற்சி சூரிய உந்துதல் செயலாக்கத்தால் நடைபெறும் உலகளாவிய நிகழ்வாகும்.<br>ii) நீர் கடலில் இருந்து ஆவியாதல் மூலம் வளி மண்டத்திற்குச் சென்று, பின் அங்கிருந்து மழைப் பொழிவாக நிலத்திற்கும், நிலத்திலிருந்து நீராக கடலுக்கும் சென்றடைவதே நீர் சுழற்சி ஆகும். | i) The hydrological cycle is a global, sun-driven process.<br>ii) Water is transported from oceans to the atmosphere, from the atmosphere to land, and from land back to oceans |
| 23. | வேலைவாய்ப்பிற்கேற்ற சூழல்கள்<br>சமூக ஒற்றுமை<br>குறைவான மக்கள்தொகை<br>அரசியல் பாதுகாப்பு<br>சுகாதரம், கல்வி | Employment opportunities<br>Social Unification<br>Under Population<br>Political Security<br>Healthcare, Education |
| 24. | சட்டமன்ற மேலவை, சட்டமன்ற கீழவை | The upper house is called the Legislative Council while the lower house is called the Legislative Assembly. |
| 25. | i) அரசியலமைப்புச் சட்டத்தின் படி நடத்தல்.<br>ii) சட்டத்துக்கு கீழ்படிதல்<br>iii) சமுதாயத்திற்கு தன் பங்களிப்பை ஆற்றுதல் மற்றும் குடிமைப் பணியை செயலாற்றுதல்.<br>iv) நற்பண்புகளையும், நீதியையும் நிலைநாட்டுதல்.<br>v) வேற்றுமைகளை மறந்து நடத்தல். | i) Loyalty to the Constitution.<br>ii) Obeys laws.<br>iii) Contributes to society and community and performs civic duty.<br>iv) Quality of goodness and justice.<br>v) Respecting diversity. |
| 26. | i) சமயச் சார்பின்மையின் நோக்கங்கள் :<br>ஒரு சமயம் சார்ந்த குழு மற்றொரு சமயக்குழுவின் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.<br>ii) ஒரு சமயத்தைச் சார்ந்த சில உறுப்பினர்கள் அதே சமயத்தைச் சார்ந்த மற்ற உறுப்பினர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.<br>iii) அரசானது எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் பின்பற்ற வலியுறுத்தாமல் இருப்பது அல்லது தனிநபர்களின் சமய சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பது. | i) One religious group does not dominate another.<br>ii) Some members don't dominate other members of the same religious community.<br>iii) The state does not enforce any specific religion nor take away the religious freedom of individuals. |
| 27. | i) வருவாயில் நடப்பு நுகர்வுக்கு பயன்படாத ஒரு பகுதி சேமிப்பு ஆகும். தற்போதைய நுகர்வுக்காக பயன்படுத்தப்படாமல் எதிர்கால பயன்பாட்டிற்கு ஒதுக்கி வைக்கப்படும் பணம் சேமிப்பாகும்.<br>ii) நம்முடைய பணத்தில் செலவழிக்கப்படாமல் இருக்கும் ஒரு பகுதியே சேமிப்பு. | i) Savings represent the part of a person's income which not used for current consumption rather kept aside for future use.<br>ii) Investment refers to the process of investment fund in a Capital asset with the view to generate returns. |
| 28. | கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் சமீபத்திய நெகிழிப் பணமாகும். | The latest type of money is plastic money in the form of Credit cards and Debit cards. |
| | **பகுதி–III (கட்டாய வினா எண்: 42)** | **Part–III 10 × 5= 50** |
| **III.** | **ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண்: 42)** | **Answer any Ten Question. (Q.NO.42 is compulsory)** |
| 29. | **நிரப்புக.**<br>i) மீர்ஜாபர்<br>ii) மண்<br>iii) வானிலை<br>iv) ஒற்றைக்<br>v) தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (NEFT) | **Fill up.**<br>i) Mir Jafer<br>ii) Soil<br>iii) Weather<br>iv) Single<br>v) National Electronic Funds Transfer (NEFT) |
| 30. | **பொருத்துக.**<br>i. ஆங்கிலேயர்கள் – 1600<br>ii) நீல் தர்பன் –இண்டிகோ விவசாயிகளின் துயரம்.<br>iii) பாரன் தீவு – செயல்படும் எரிமலை<br>iv) சட்டமன்ற பேரவை–கீழவை<br>v) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் – 1935 | **Match the following.**<br>i) The British – 1600<br>ii) Nil Darban – Misery of the Indigo cultivators.<br>iii) Barren Island – Active Volcano<br>iv) Legislative Assembly–Lower House<br>v) Reserve Bank Act – 1935 |

www.Padasalai.Net

**31.**

சரியா? தவறா?
i) சரி
ii) சரி
iii) சரி
iv) தவறு
v) தவறு

True or False.
i) True
ii) True
iii) True
iv) False
v) False

**32.**

**வேறுபடுத்துக.**

**i)**

| காலநிலை | வானிலை |
|---|---|
| i) காலநிலை என்பது ஒரு பகுதியின் நீண்ட நாளைய வானிலை சராசரியைக் குறிப்பதாகும். | i) வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தின் வளிமண்டலத்தில் நிலவும் தட்பவெப்ப தன்மைகளை குறிப்பதாகும் |
| ii) 35 வருடங்களுக்கு கணக்கிட்டுக் கூறுவதாகும். | ii) 24 மணி நேரத்தில் நடக்கக்கூடிய நிகழ்வைக் குறிப்பதாகும். |

**Distinquish between.**

i)

| Climate | Weather |
|---|---|
| i) Climate is generally defined as the average conditions of the weather of place or a region. | i) Weather is the day today conditions(state) of the atmosphere like sunshine, temperature humidity and such other elements. |
| ii) It is calculated for 35 years. | ii) Refers to an event that can happen in 24 hours. |

**ii)**

| உருமாறிய பாறைகள் | படிவுப் பாறைகள் |
|---|---|
| i) மெட்டமார்பிக் என்ற வார்த்தை இரண்டு கிரேக்க சொல்லான மெட்டா (Meta) மற்றும் மார்பா (Morpha) என்ற வார்த்தையில் இருந்து பெறப்பட்டதாகும். மெட்டா என்பது 'மாற்றம்' என்றும், மார்பா என்பது 'வடிவம்' என்றும் பொருள்படும். | i) செடிமென்டரி (sedimentary) என்ற சொல் 'செடிமென்டம்' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள் படியவைத்தல் என்பதாகும். |
| ii) அதிகவெப்ப அழுத்தம் காரணமாக தீப்பபாறைகளும் படிவுப்பபாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகள் என பெயர் பெறுகிறது. | ii) படிய வைக்கப்பட்ட படிவுகள் நீண்ட காலமாக அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தின் காரணமாக இறுகியதால் படிவுப் பாறைகள் உருவாகின்றன. |

**ii)**

| Metamorphic rocks | Sedimentary rocks |
|---|---|
| i) The word Metamorphic is derived from two Greek words "Meta" and "Morpha", Meta means change and Morpha means shape. | i) The word 'Sedimentary' has been derived from Latin word 'Sedimentum' means settling down . |
| ii) A rock formed by the alteration of igneous and sedimentary rocks subject to the high temperature and pressure is called metamorphic rocks. | ii) Due to high temperature and pressure, the undisturbed sediments of long period is cemented to form sedimentary rocks. |

**i) காரணம் கூறுக** : 1000 மீட்டர் உயரத்திற்கு 6.50C என்ற அளவில் வெப்பநிலை குறைந்து கொண்டடே செல்கிறது.

**i) Give reason:** Temperature decreases with increasing height is known as Lapse rate which is 6.5 degree celsius per 1000 meters in troposphere

**33.**

**நவீன இந்திய ஆதாரங்கள்:**

- அரசியல், சமூக – பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை பற்றி அறிய உதவுகின்றன.
- ஆரம்பம் முதலே ஐரோப்பியர்களால் திறம்பட பதிவு செய்த அரசாங்க பதிவேடுகள் மதிப்பு மிக்க ஆதாரங்களாக உள்ளன.
- ஆவணக் காப்பகங்கள் விலை மதிப்பற்ற வரலாற்றுத் தகவல்களின் பெட்டகமாகும்.

**எழுதப்பட்ட ஆதாரங்கள்:**

**Sources of Modern India**

(i) The sources for the history of modern India help us to know the political, socio-economic and cultural developments in the country.
(ii) The Portuguese, the Dutch, the French, the Danes, and the English recorded their official transactions in India on state papers.
(iii) History can be written with the help of written sources and material sources.

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | • இலக்கியங்கள், பயணக் குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்து பிரதிகள் முதலியவை எழுதப்பட்ட ஆதாரங்களாகும்.<br>• அச்சு இயந்திரம் மூலம் பல மொழிகளில் எண்ணற்ற புத்தகங்கள் வெளியிடப்பட்டன.<br>• குறிப்பாக ஆனந்தரங்கம் என்பவரின் நாட்குறிப்புகள் அரசியல் தீர்வுகளை வெளிப்படையாக விளக்கும் வரலாற்று ஆதாரமாகும்.<br>• எழுதப்பட்ட ஆதாரங்கள் மூலம் கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளைப் பற்றி மக்கள் எளிதாக அறிய முடிகிறது.<br>**பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள்:**<br>• ஓவியங்கள், சிலைகள், வரலாற்றுப் புகழ்மிக்க கட்டிடங்கள், நாணயங்கள் மற்றும் அருங்காட்சியகத்தில் உள்ள கலை, தொல்பொருட்கள் போன்றவை பயன்பாட்டு பொருள் ஆதாரங்களாகும்.<br>• குறிப்பாக ஓவியங்கள், சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன.<br>• நாணயங்களும் நம் நிர்வாக வரலாற்றை அறிய உதவும் ஒரு நல்ல ஆதாரமாகும். | **Written Sources:**<br>i) After the advent of the printing press, book were published<br>in different languages people began to acquire knowledge easily in the fields<br>like art, literature, history and science.<br>(ii) Written sources include Literatures, Travel Accounts, Diaries, Auto Biographies,<br>Pamphlets, Government Documents and Manuscripts.<br>**Archives:**<br>It has main source of information for understanding past<br>administrative machinery as well as a guide to the present and future generations<br>related to all matters.<br>(i) Material Sources: Paintings and statues are the main sources of modern<br>Indian history which provide information about national leaders and historical<br>personalities and their achievements.<br>(ii) Historical buildings and museums preserve and promote our cultural heritage.<br>(iii) Coins are a good source to know about administrative history. |
| 34. | • இந்தியாவில் ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாட்டில் முன்னோடியாக இருந்த பூலித்தேவர் நெற்கட்டும் செவல் பாளையக்காரர்.<br>• ஆற்காடு நவாப் முகமது அலிக்கும் ஆங்கிலேயருக்கும் கப்பம் கட்ட மறுத்த பூலித்தேவரை எதிர்த்து படையெடுத்த கூட்டுப்படையை தோற்கடித்தார்.<br>• ஆங்கிலேயருடன் போரிட்டு வெற்றி பெற்ற முதல் இந்திய மன்னர் பூலித்தேவர் ஆவார்.<br>• 1759ல் யூசுப்கான் தலைமையிலான நவாப் படைகளால் தோற்கடிக்கப்பட்டார்.<br>• 1764ல் நெற்கட்டும் செவ்வலை பூலித்தேவர் கைப்பற்றினார்.<br>• 1767ல் கேப்டன் கேம்பெல் என்பவரால் தோற்கடிக்கப்பட்டு தலை மறைவாக வாழ்ந்து இறந்து போனார்.<br>• துணிச்சலான அவரது போராட்டம் தென்னிந்திய வரலாற்றில் நிலைத்து நின்றது. | • Pulithevar was the pioneer in Tamil Nadu, to protest against the English rule in India. He was the Palayakkarar of the Nerkattumseval, near Tirunelveli.<br>• During his tenure he refused to pay the tribute neither to Mohammed Ali, the Nawab of Arcot nor to the English. Further, he started opposing them. Hence, the forces of the Nawab of Arcot and the English attacked Pulithevar. But the combined forces were defeated by Pulithevar at Tirunelveli.<br>• Pulithevar was the first Indian king to have fought and defeated the British in India. After this victory, Pulithevan attempted to form a league of the Palayakkars to oppose the British and the Nawab.<br>• In 1759, Nerkattumseval was attacked by the forces of Nawab of Arcot under the leadership of Yusuf Khan.<br>• Pulithevar who lived in exile recaptured Nerkattumseval in 1764.<br>• Later, he was defeated by Captain Campell in 1767. Pulitzer escaped and died in exile without fulfilling his purpose, although his courageous trail of a struggle for independence in the history of South India. |
| 35. | **நீர் வழிந்தோடல்**<br>• ஓடும் நீர், ஈர்ப்பு விசையினால் இழுக்கப்பட்டு நிலப்பகுதியின் மேற்பரப்பு முழுவதும் செல்வதாகும்.மேற்பரப்பு நீரும், நிலத்தடி நீரும் புதுப்பிக்கப்படுகின்றன.<br>• மழைவீழ்ச்சியின் அளவு, மண்ணின் நீர் புகும் தன்மை, தாவரமூட்டம் மற்றம் நிலச்சரிவைச் சார்ந்து உள்ளது. | **Types of Runoff:**<br>Based on the time interval between the instance of rainfall and generation of runoff, the runoff may be classified into following three types<br>**Surface Runoff:**<br>It is the portion of rainfall, which enters the stream immediately after the rainfall. It occurs, when the rainfall is longer, heavier and exceeds the rate of infiltration. In this condition the excess water makes a head over the ground surface, which tends to move from one place to another following land gradient and |


| | | |
|---|---|---|
| | • மழைப்பொழிவின் கால இடைவெளி மற்றும் நீர் வழிந்தோடல் உருவாக்கத்தின் அடிப்படையில் நீர் வழிந்தோடல் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.<br>i) மேல்மட்ட மழைநீர் வழிந்தோடல்<br>ii) அடிப்பரப்பு நீர் வழிந்தோடல்<br>iii) அடி மட்ட நீர் ஓட்டம்<br>**மேல்மட்ட மழைநீர் வழிந்தோடல்:**<br>• மழைப் பொழிந்தவுடன் மழை நீரின் ஒரு பகுதி நீரோடையோடு கலந்து விடுகிறது.<br>• இது மழைப்பொழிவு அதிகமாகவும் நீண்ட காலத்திற்கும் ஊடுருவலை விட அதிகமாக இருக்கும் பொழுதும் ஏற்படுகிறது.<br>• ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதால் நிலநீர் ஓட்டம் எனவும் அறியப்படுகிறது.<br>• இந்த நிலநீர் ஓட்டம் ஆறுகள், சிறு ஓடைகள் மற்றும் கடல்களில் இணைவதால் இது மேல்மட்ட நீர் வழிந்தோடல் என அழைக்கப்படுகிறது.<br>**அடிபரப்பு நீர் வழிந்தோடல்:**<br>• நீரானது அடிமண் அடுக்கினுள் நுழைந்து நிலத்தடி நீரில் கலக்காமல் பக்கவாட்டு திசையில் நகர்ந்து ஓடைகள், ஆறுகள் மற்றும் கடலுடன் கலப்பதால் இதற்கு அடிப்பரப்பு நீர் வழிந்தோடல் என்று பெயர்.<br>**அடிமட்ட நீர் ஓட்டம்:**<br>• செறிவடைந்த நிலத்தடி நீர் மண்டலத்திலிருந்து நீர் பாதை வழியாக நிலத்தடி நீராக ஓடுவதே அடிமட்ட நீர் ஓட்டமாகும். | is known as overland flow. When the overland flow joins the streams, channels or oceans, it is termed as surface runoff or surface flow.<br>**Sub – Surface Runoff:**<br>The water that has entered the subsoil and moves laterally without joining the water-table to the streams, rivers or oceans is known as sub- surface runoff. The sub – surface runoff is usually referred as interflow.<br>**Base Flow:**<br>It is a flow of underground water from a saturated ground water zone to a water channel. It usually appears at a downstream location where the channel elevation is lower than the groundwater table. Groundwater provides the stream flow during dry periods of small or no precipitation. |
| 36. | கிடைமட்டமாக நகரும் வாயுவிற்கு காற்று என்று பெயர். செங்குத்தாக நகரும் வாயுவிற்கு காற்றோட்டம் என்று பெயர்.காற்று எப்பொழுதும் உயர் அழுத்தப்பகுதிகளிலிருந்து குறைந்த அழுத்த பகுதியை நோக்கி வீசும். காற்றின் அமைப்புகள் மூன்று பெரும் வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை<br>i) கோள் காற்றுகள் (அ) நிரந்தர காற்றுகள்<br>ii) பருவக்காலக் காற்றுகள் மற்றும்<br>iii) தலக் காற்றுகள் (அ) பிரதேசக் காற்றுகள்<br>**i) கோள் காற்றுகள்:**<br>ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள் காற்றுகள் (அ) நிலையான காற்று என்று அழைப்பர்.<br>எ.கா. வியாபாரக்காற்று, மேலைக்காற்று, துருவக்காற்று<br>ii) **பருவக்காலக் காற்றுகள்:**<br>பருவத்திற்கு ஏற்றவாறு அதன் திசையை மாற்றி வீசும். இக்காற்றுகள் கோடைக்காலத்தில் கடலிலிருந்து நிலத்தை நோக்கியும், குளிர்காலத்தில் நிலத்திலிருந்து கடலை நோக்கியும் வீசும்.<br>iii) **தலக் காற்றுகள் (அ)பிரதேசக் காற்றுகள்:**<br>ஒரு நாள் அல்லது ஆண்டின் குறுகிய காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சிறிய பகுதியில் வீசும்.<br>எ.கா. நிலக்காற்று, கடல் காற்று | The horizontal movement of air is called wind.<br>The wind systems are broadly categorized into three as follows.<br>i) Planetary winds<br>ii) Seasonal winds<br>iii) Local winds<br>i) **Planetary Winds** are the ones which blow almost in the same direction throughout the year. So, they are called as Permanent or planetary winds. Trade winds, Westerlies and polar easterlies are the types of prevailing winds.<br><br>ii). **Seasonal winds** are those which change their direction according to season in a year. They are called as monsoon winds. These winds blow from sea to land during summer and land to sea during winter.<br><br>iii). **Local winds** are the winds blow over a small area only during a particular time of a day or a short period of a year. Land and sea breezes are example of these winds. |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 37. | **சூழியல் (அல்லது) இயற்கை காரணங்கள் :**<br>சூழியல் இடம்பெயர்வுக்கு எரிமலை வெடிப்பு, நில அதிர்வு, வெள்ளம், வறட்சி போன்றவை முக்கிய காரணிகளாகும்.<br>**பொருளாதார காரணங்கள் :**<br>வளமான வேளாண் நிலம், வேலைவாய்ப்பு, தொழில் நுட்ப வளர்ச்சி போன்ற பொருளாதார காரணிகள் புலம் பெயர்வோரை ஈர்க்கின்றன.<br>**சமூக – பண்பாட்டுக் காரணங்கள் :**<br>பெண்களின் திருமணத்திற்கு பின் இடம்பெயர்வு, புனித யாத்திரைகளுடன் தொடர்புடைய இடம்பெயர்தல் ஆகியவை சமூக பண்பாட்டுப் பழக்கத்தினை அடிப்படையாகக் கொண்டவை.<br>**மக்கள்தொகை சார்ந்த காரணங்கள் :**<br>மக்கள் தொகையின் உட்கூறு பண்புகளான வயது, பாலினம், அதிக மற்றும் குறைந்த மக்கள் தொகை போன்றவை இடம்பெயர்வுக்கான முக்கிய காரணங்களாகும்.<br>பிற பிரிவினரை விட இளையோர் இடம்பெயர்வு அதிகம். திருமணத்திற்கு பின் பெண்கள் புலம் பெயர்கிறார்கள். அதிக மக்கள் தொகை ஓர் உந்து காரணி. குறைவான மக்கள்தொகை ஓர் இழுகாரணி.<br>**அரசியல் காரணங்கள் :**<br>காலங்காலமாக காலனி ஆதிக்கம், போர்கள், அரசாங்கக் கொள்கைகள் போன்றவை இடம்பெயர்தலில் முக்கிய பங்குவகிக்கின்றன. பழங்காலத்திலிருந்தேபோர்கள் இடம்பெயர்வுக்கான குறிப்பிடத்தக்க காரணமாகும். | • **Ecological or Natural Causes of Migration:**<br>The causes operate under this category are natural ones. They include volcanic eruption, earthquake, flood, drought etc..<br>• **Economic consequences:**<br>The availability of fertile agricultural land, employment opportunities, development of technology etc., are some of the economic causes that attract the migration.<br>• **Socio-Cultural causes of:**<br>Migration of women after marriage and migration associated with pilgrimage are based on the socio-cultural customs.<br>• **Demographic consequences:**<br>It changes age and sex composition of population. Migration of females after their marriage leads to decline in sex ratio in the source regions and increase the sex ratio in the regions of destinations.<br>• **Political causes** of Migration Various political causes like colonization, wars, government policies etc.. |
| 38. | • **முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பபாடுகள்**<br>• முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசாங்கத்தின் பல்வேறு முக்கிய முடிவுகள் அவரது தலைமையின் கீழ் எடுக்கப்படுகின்றன.<br>• மாநில முதலமைச்சர், அமைச்சரவையை, உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.<br>• பல்வேறு துறைகளை கண்ககாணித்து ஆலோசனை வழங்குகிறார். மேலும் அவர் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.<br>• முதலமைச்சர் மாநில அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். அவர் மாநில அரசின் கொள்கைகள் மக்களின் நலனுக்கு எதிராக இல்லாததை உறுதி செய்கிறார். மாநில அரசாங்கத்தின் கொள்ககை முடிவுகளில் அவரது முடிவே இறுதியாக இருக்கும்.<br>• மாநில அரசாங்கத்தின் உயர் பதவிகளில் நியமனம் செய்யும் முக்கிய அதிகாரத்ததைக் கொண்டுள்ளார். முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் பல்வேறு உயர் அதிகாரிகளை நியமிக்கிறார். | **Powers and Functions:**<br>■ The Chief Minister is the real executive of the State. All major decisions of the State Government are taken under his leadership.<br>■ The Chief Minister plays an important role in the formation of the Council of Ministers. On the advice of the Chief Minister, the Governor appoints the other Ministers.<br>■ The Chief Minister supervises the activities of different ministries and advises them accordingly. He also coordinates the activities of different ministries.<br>■ The Chief Minister plays an important role in making policies of the State Government.<br>He has to ensure that the policies of the government do not go against public interest. His voice is final in policy decisions of the State Government.<br>■ He plays an important role in making higher appointments of the State Government. The Governor appoints different higher officials of the State Government on the advice of the Chief Minister and his Council of Ministers. |
| 39. | குடியுரிமை ரத்து பற்றிய மூன்று வழிமுறைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியின் 5 முதல் 11 வரையிலான விதிகள் குறிப்பிடுகின்றன. | Part II of the Constitution of India (Article 5-11) prescribes three ways of losing citizenship.<br>**Renunciation: (is a voluntary act)**<br>when a person after acquiring the citizenship of another country gives up his/her Indian citizenship. |

www.Padasalai.Net


| | | |
|---|---|---|
| | **குடியுரிமையை துறத்தல் (தானாக முன் வந்து குடியுரிமையைத் துறத்தல்)**<br>ஒருவர் வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது.<br>**குடியுரிமை முடிவுக்கு வருதல் (சட்டப்படி நடைபெறுதல்)**<br>ஓர் இந்தியக் குடிமகன் தாமாக முன்வந்து வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை தானாகவே முடக்கப்டுகிறது.<br>**குடியுரிமை மறுத்தல்: (கட்டாயமாக முடிவுக்கு வருதல்)**<br>மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக செயல்படுதல் முதலியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை பெறும் ஒருவரின் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்கச் செய்கிறது. | **Termination: (takes place by operation of law)**<br>When an Indian citizen voluntarily acquires the citizenship of another country; he/she automatically ceases to be an Indian citizen.<br>**Deprivation: (is a compulsory termination)**<br>The citizenship is deprived on the basis of an order of the Government of India in cases involving acquisition of Indian citizenship by fraud, false representation or being disloyal to the Constitution. |
| 40. | தீமைகள்:<br>i) இருமுகத் தேவை பொருத்தமின்மை<br>ii) பொதுவான மதிப்பின் அளவுகோல்<br>iii) பொருட்களின் பகுப்படாமை<br>iv) செல்வத்தை சேமிப்பதற்கான சிரமங்கள். | Hence Barter system had many deficiencies like,<br>i) Lack of double coincidence of wants,<br>ii) Common measure of value<br>iii) Indivisibility of commodities<br>iv) Difficulties of storing wealth |
| 41. | **வங்கி வைப்புகளின் வகைகள்:**<br>**i. மாணவர் சேமிப்பு கணக்கு:**<br>சில வங்கிகள் குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கான சேமிப்பு கணக்குகள் துவக்கியுள்ளனர்.<br>**ii. சேமிப்பு வைப்பு:**<br>வாடிக்கையாளர் தன்னுடைய நடப்பு வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்க ஆரம்பிக்கும் கணக்கிற்கு சேமிப்பு கணக்கு என்பர்.<br>**iii. நடப்பு கணக்கு வைப்பு:**<br>நடப்பு கணக்குகள் பொதுவாக வர்த்தக நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் பொது அதிகாரிகளால் ஆரம்பிக்கப்படுகிறது.<br>**iv. நிரந்தர வைப்பு:**<br>நிரந்தர வைப்பு கணக்கு என்பது முதலீட்டாளர்கள் தங்கள் பணத்திற்கு பாதுகாப்பும், நிலையான வருவாயும் விரும்புவார்கள். நிரந்தர வைப்பை, காலவைப்பு எனவும் அழைக்கலாம். | **Types of Bank Deposits**<br>**i. Student Savings Account**<br>Some banks offer saving accounts specifically for young people enrolled in high schools or colleges. The main features of these account is to maintain zero Balance.<br>**ii. Savings Deposits**<br>Savings deposits are opened by customers to save the part of their current income. The customers can withdraw their money from their accounts when they require it. The bank also gives a small amount of interest to the money in the saving deposits.<br>**iii. Current Account Deposit**<br>Current accounts are generally opened by business firms, traders and public authorities. The current accounts help in frequent banking transactions as they are repayable on demand.<br>**iv. Fixed Deposits**<br>Fixed deposits accounts are meant for investors who want their principle to be safe and yield them fixed yields. The fixed deposits are also called as Term deposit as, normally, they are fixed for specified period. |

| | | |
|---|---|---|
| 42. |  | |
| 43. அ) | • கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய கவர்னர் மற்றும் லண்டன் வர்த்தக நிறுவனத்திற்கு இங்கிலாந்து ராணி எலிசபெத் 1600 டிசம்பர் 31 அன்று அனுமதி வழங்கினார்.<br>• கி.பி 1608 ஆம் ஆண்டு வணிகத் தலம் அமைக்க ஜஹாங்கீர் அவைக்கு வந்த மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ், போர்ச்சுகீசிய தலையீடுகளினால் அனுமதி கிடைக்காமல் இங்கிலாந்து திரும்பினார்.<br>• 1612–ல் சூரத் அருகே ஆங்கிலத் தளபதி தாமஸ் பெஸ்ட், போர்ச்சுகீசிய கடற்படையை தோற்கடித்தார்.<br>• இந்நிகழ்வில் மகிழ்ச்சியடைந்த ஜஹாங்கீர், 1613ல் சூரத்தில் ஆங்கில வணிக மையம் அமைக்க அனுமதித்தார். இது ஆரம்பத்தில் ஆங்கிலேயரின் தலைமையகமாக இருந்தது.<br>• 1614ல் கேப்டன் நிக்கோலஸ், போர்ச்சுகீசியரை வென்றதால் முகலாயர் அவையில் ஆங்கிலேயரின் கௌரவம் மேலும் அதிகரித்தன.<br>• 1615ம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு வந்த சர்தாமஸ் ரோ மூன்று ஆண்டுகள் ஆக்ராவில் தங்கி, இறுதியில் ஜஹாங்கீர் அனுமதியுடன் ஆக்ரா, அகமதாபாத். புரோச் முதலிய இடங்களில் வணிக மையங்களை நிறுவினார்.<br>• பிளாசி மற்றும் பக்சார் போர்களுக்கு பிறகு ஆங்கில கம்பெனி ஓர் அரசியல் சக்தியாக மாறியது. | **a) British establish their trading centre in India.**<br>• In 1600, Elizabeth, the Queen of England granted a charter to the governor and company of Merchants of London to trade with East Indies.<br>• Captain Hawkins visited Jahangir's court and secured permission to raise a settlement at Surat which was cancelled later.<br>• In 1612, the English Captain Thomas Best, inflicted a severe defeat over the Portuguese in a naval battle near Surat.<br>• The Mughal Emperor Jahangir permitted the English to establish their factory in 1613 at Surat, which became the headquarters of the English in western India.<br>• Captain Nicholas Downton won another decisive victory over the Portuguese in 1614.this enhanced the British prestige at the Mughal court.<br>• In 1615, Sir Thomas Roe was sent to Jahangir's court by King James I of England, who succeeded in concluding a commercial treaty with the emperor<br>• Before the departure of Sir Thomas Roe, the English had established their trading centres at Surat, Agra, Ahmadabad and Broach. |
| ஆ) | (Or) a) | |
| | மண்ணின் வகைபாடு: மண் உருவாகும் விதத்தில் அவற்றின் நிறம் பௌதீக மற்றும் இரசாயன பண்புகளின் அடிப்படையில் ஆறு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன அவை. | Definition:<br>Soil is a mixture of Organic matter, minerals, gases, liquids and organisms that together support life.<br><br>Classification of soils: |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | i) வண்டல் மண்<br>ii) கரிசல் மண்<br>iii) செம்மண்<br>iv) சரளை மண்<br>v) மலை மண்<br>vi) பாலை மண்<br>**i) வண்டல் மண்:** வண்டல் மண் ஆற்றுச் சமவெளிகள் மற்றும் கடற்கரைச் சமவெளிகளில் காணப்படுகிறது. இது மற்ற மண் வகைகளைக் காட்டிலும் வளம் மிக்கது. இது நெல், கரும்பு, கோதுமை, சணல் மற்றும் மற்ற உணவுப் பயிர்கள் பயிரிட ஏற்றது.<br>ii) **கரிசல் மண்:** கரிசல் மண், தீப்பாறைகள் சிதைவடைவதால் உருவாகின்றன. கரிசல் மண்ணில் பருத்திப் பயிர் நன்கு வளரும்.<br>**iii) செம்மண்:** செம்மண், உருமாறியப் பாறைகள் மற்றும் படிகப்பாறைகள் ஆகியவை சிதைவடைவதால் உருவாகிறது. இது வளம் குறைந்த மண்ணாக இருப்பதால் திணைப் பயிர்கள் பயிரிட ஏற்றது.<br>**iv) சரளை மண்:** சரளை மண் அயன மண்டல பிரதேச காலநிலையில் உருவாகிறது. இம்மண் வளம் குறைந்து காணப்படுவதால் தேயிலை, காப்பி போன்ற தோட்டப் பயிர்கள் பயிரிட ஏற்றது.<br>**v) மலை மண்** : மலை மண், மலைச் சரிவுகளில் காணப்படுகிறது. இப்பகுதிகளில் கார தன்மையுடன் குறைந்த பருமன் கொண்ட அடுக்காக உள்ளது.<br>**vi) பாலை மண்:** பாலை மண் அயன மண்டல பாலைவனப் பிரதேசங்களில் காணப்படுகிறது. வளம் குறைந்த இம்மண்ணில் வேளாண்மையை மேற்கொள்ள இயலாது. | Soils are classified on the basis of their formation, colour, physical and chemical properties. Based on these, soil is classified into six major types. **They are: i) Alluvial soil, ii) Black soil, iii) Red soil, iv) Laterite soil, v) Mountain soil, vi) Desert soil.**<br><br>**Alluvial soil:**<br>Found in the regions of river valleys, flood plains and coastal regions.<br>Formed by the deposition of silt by the running water.<br>Most productive of all soils.<br>Suitable for the culitivation of sugarcane, jute, rice, wheat.<br>**Black soils:**<br>Formed by weathering of igneous rocks.<br>Clayey in nature.<br>Retains moisture.<br>Ideal for growing cotton.<br>**Red Soils:**<br>Formed by weathering of metamorphic rocks and crystalline rocks.<br>Found in semi – arid regions.<br>Not a fertile.<br>Is soil brown red in colour due to the presence of iron oxide<br>Suitable for millet cultivation.<br>**Laterite soils:**<br>Formed by the process of leaching.<br>Found in trophical regions, which experienced alternate wet and dry condition.<br>Infertile soil.<br>Suitable for plantation of tea and coffee.<br>**Mountain soils:**<br>Found in slopes of mountains.<br>Thin and acidic in nature.<br>Nature of soil differs based on the altitude.<br>**Desert soils:**<br>Found in hot desert region.<br>Porous and saline in nature.<br>Infertile in nature.<br>Agriculture not successful. |

44.




www.Padasalai.Net